செ.வெ.எண்.32 நாள்.22.01.2018

காஞ்சிபுரம் மாவட்டத்தில்
24 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.14 இலட்சத்து 12 ஆயிரத்து 160 மதிப்பிலான இணை சக்கரங்கள் பொருத்தப்பட்ட விலையில்லா பெட்ரோல் வாகனங்களை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பா.பொன்னையா இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.

*********

காஞ்சிபுரம் மாவட்டத்தில் மாற்றுத்திறனாளிகள் நலத்துறை மூலம் வழங்கப்படும் பல்வேறு நலத்திட்டங்களில் ஒன்றான இணை சக்கரங்கள் பொருத்தப்பட்ட விலையில்லா பெட்ரோல் வாகனங்கள் வழங்கும் திட்டத்தின் கீழ் 24 மாற்றுத்திறனாளிகளுக்கு தலா ரூ.58,840 விலையிலான ரூ.14 இலட்சத்து 12 ஆயிரத்து 160 மதிப்பிலான வாகனங்களை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பா.பொன்னையா இ.ஆப., அவர்கள் வழங்கினார். காஞ்சிபுரம் மாவட்டத்தைச் சார்ந்த இரு கால்கள் பாதிக்கப்பட்ட 24 மாற்றுத்திறனாளிகளும் தேர்வுக்குழு மூலம் தேர்வு செய்யப்பட்டு, இணை சக்கரங்கள் பொருத்தப்பட்ட பெட்ரோல் வாகனங்களை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் வழங்கப்பட்டது.

மாற்றுத்திறனாளிகள் நலத்துறை மூலம் மூன்று சக்கர சைக்கிள், சக்கர நாற்காலி, தாங்குக் கட்டைகள், காலிபர், செயற்கைக்கால், காதொலிகருவிகள், இணை சக்கரங்கள் பொருத்தப்பட்ட பெட்ரோல் வாகனம் உள்ளிட்ட உபகரணங்கள் வழங்கப்பட்டு வருகிறது.

இது குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் குறிப்பிடும் போது உபகரணங்கள் தேவையுள்ளவர்கள் தங்களது மாற்றுத்திறனாளிகளுக்கான அடையாள அட்டையின் நகல், ஆதார் அட்டையின் நகல், குடும்ப அட்டையின் நகல் ஆகியவற்றோடு வெள்ளைத்தாளில் எழுதப்பட்ட விண்ணப்பங்களை மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகம், ஜி.எஸ்.டி.சாலை, கோர்ட் அருகில் செங்கல்பட்டு, என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கலாம் .

மேலும் கால்கள் பாதிக்கப்பட்ட மற்றும் செவித்திறன் குன்றிய மாற்றுத்திறனாளிகள் தையல் பயிற்சி பெற்றிருந்தால் அவர்கள் மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் மூலம் வழங்கப்படும் மோட்டார் பொருந்திய தையல் இயந்திரங்களைப் பெறவும் விண்ணப்பிக்கலாம் என தெரிவித்தார்.

மேலும், காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தினத்தன்று www.kanchi.nic/ddro என்ற இணையதளம் துவக்கி வைக்கப்பட்டது. இந்த இணையதளத்தில் மாற்றுத்திறனாளிகள் துறை சார்ந்த விண்ணப்பங்கள் மாற்றுத்திறனாளிகளுக்கு அரசால் வழங்கப்படும் உதவிகள் குறித்த அரசாணைகள், சிறப்பு பள்ளிகளின் விவரங்கள் உள்ளடங்கப்பட்டு மாற்றுத்திறனாளிகளுக்கு எளிதில் திட்டங்களை அறிந்து கொள்ளவும் வழி செய்யப்பட்டுள்ளது. பிரத்தேகமாக கண் பார்வையற்ற மாற்றுத்திறனாளிகளும் படிக்கும் வகையில் மேன்பொரும் இணைக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் திரு.ஸ்ரீநாத் உடனிருந்தார்.

செய்தி வெளியீடு,
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
காஞ்சிபுரம் .